செய்தி வெளியீடு எண்:520 நாள் : 20.10.2015

# செய்தி வெளியீடு

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் பண்டிகை காலத்தையொட்டி பொதுவிநியோகதிட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்களுக்கு தங்குதடையின்றி விநியோகம் செய்வது குறித்து ஆய்வு.</u>**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, இன்று (20.10.2015) சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி மற்றும் சிறப்பு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில், போன்ற அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு பண்டிகைகாலத்தையொட்டி தங்குதடையின்றி விநியோகம் செய்வது குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சீரிய திட்டமான பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில், போன்ற அத்தியாவசியப் பொருட்கள், கூட்டுறவுத் துறை சார்ந்த 32,219 நியாய விலைக் கடைகள் வாயிலாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பண்டிகை காலம் துவங்கிவிட்ட நிலையில், இப்பணியினை சிறப்பாக மேற்கொள்ளுதல் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,** அத்தியாவசியப் பொருட்களை போதிய அளவு இருப்பு வைத்து எந்தவித புகாருக்கும் இடம் தராமல், பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். வெளிச்சந்தையில் அதிகரித்து வரும் பருப்பு விலையினை கட்டுப்படுத்தும் வகையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்** அறிவித்துள்ளபடி, குறைந்த விலையில், ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.110 க்கு விற்பனை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் உயர் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்தும் துறை உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்தாலோசனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளீதரன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த்,இ.ஆ.ப., திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், திரு.பா.பாலமுருகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் செயலாளர் திரு. சியாம்சுந்தர் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**